## ஜூன் 2017 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு

பொதுவாக விவசாய பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே காணப்பபடுகின்றன. ஆதலால், விவசாயிகள் தங்கள் பயிர்களில் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

தென் மேற்கு பருவமழை ஜூன் முதல் வாரம் முதல் பெய்ய தொடங்கியுள்ளது. நிலத்தடி நீரில் பாசனம் செய்யும் நெல் விவசாயிகள் நாற்று விடும் போதும் மற்றும் நடவுவயல்களிலும் கடை பிடிக்க வேண்டிய பூச்சி நோய் மேலாண்மை.

### நெல் நாற்றாங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள்.

இலைப்பேன், நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த

### நெற்பயிரில் நோய் மேலாண்மை

அ) ஈர விதை நேர்த்தி

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.

2. நெல் நாற்றங்காலைப் பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

**3. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இந்தத் தேங்கிய நீரில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

### நெற்பயிரில் பூச்சி மேலாண்மை

1. நாற்றங்காலில் அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 சென்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 % தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.

4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் வேப்ப எண்ணெய் 3 சதவிகிதம் அல்லது டைக்குளோர்வாஸ் 20 மி.லி அல்லது குளோர்பைரிபாஸ் 20 EC 2 மில்லி ஒரு லிட்டருக்கு என்ற விகிதத்தில் தேவைக்கேற்ப தெளிக்கவும்.

**கரும்பு**

கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சிவகங்கை, கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கரும்பில் தண்டுதுளைப்பான் தாக்குதல் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை வயல்களில் நட்ட 45 நாட்களில் இருந்து 15 நாள் இடைவெளியில் (2 சி.சி / ஏக்கருக்கு) 6 முறை விடவும்.

**பருத்தி**

காவேரி படுகையில் பருத்தியில் இளம்சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகின்றன. ஆகையால் விவசாயிகள் வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும்.

பருத்தியைத் தாக்கும் அசுவிணி, இலைப்பேன், தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகிய சாறு உறிஞ்சும் பூச்சிகனை கீழ்கண்ட முறைகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மஞ்சள் ஒட்டுப்பொறிகளை ஏக்டருக்கு 12 என்ற வீதம் பயிர்களுக்கு மேல் ஒரு அடி மேலே வைத்து கண்காணிக்க வேண்டும். வேப்ப எண்ணை 0.5 சதவீதக் கரைசல் அல்லது வேப்பம் பருப்பிலிருந்து பெறப்பட்ட சாறு 5 சதவீதம் தெளிப்பதால், வெள்ளை ஈ பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்டருக்கு அசர்டிராக்டின் 2.5 லிட்டர் அல்லது மீன் எண்ணை சோப்பு திரவம் 25 கிராம் / லிட்டர், டைமித்தோயேட் 500 மிலி (அ) புப்ரோபோசின் 1 லிட்டர் (அ) இமிடாகுளோபிரிட் 100 மிலி (அ) தயோமீத்தாக்சம் 100 கிராம் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த களை செடிகளை நீக்க வேண்டும். மாவுப்பூச்சி மற்றும் இளஞ்சிவப்பு காயப்புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த எக்டருக்கு புரோபினோபாஸ் 50 % இ.சி. 1500 மிலி (அ) டிரையோசோபாஸ் 40 இ.சி. 2500 மிலி (அ) குயினால்பாஸ் 25 இசி 2000 மிலி (அ) தையோடிகார்ப் 75 % டபிள்யூ பி 1000 கி தெளிக்கவும்.

**பயறு வகைகள்**

விதை நேர்த்தி செய்யவும். மஞ்சள் தேமல் நோயின் தாக்குதலை திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயிறு செடிகளில்

மஞ்சள் ஒட்டும் பொறி (5 / ஏக்கருக்கு) வைத்து நோய் பரப்பும் வெள்ளை ஈக்களை கண்காணிக்கவும். வெள்ளை ஈயின் தாக்குதல் தென்பட்டால் டைமிதோவேட் (அல்லது) மிதைல் டெமட்டான் மருந்தினை 200 மில்லி ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் தெளிக்கவும்.

**வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் மேலாண்மை**

பருவமழை மேலும் தாமாதமானால் வறட்சி தொடர வாய்ப்புள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் பலவகையான மாவுப்பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.

இவற்றை மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து (5 பொறி / ஏக்கருக்கு) கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணை சோப் 25 கிராம் ஒரு லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

**பப்பாளி மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிரிடும் விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணிக்கவும். இவற்றை ஒட்டுண்ணிகளின் மூலம் கட்டுப்படுத்தவும்.

**தகவல்**

பயிர் பாதுகாப்பு மையம், வேளாண் பல்கலைக் கழகம், கோயமுத்தூர் - 641 003.